# DEPOSITION OF WITNESS

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF I ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.

அமர்வு வழக்கு எண்.205/2018

அ.சா.- 1

| | | | |
|---|---|---|---|
| பெயர் - பொன்னம்மாள் | | வயது | : 45 |
| க/பெ.-தங்கராஜ் | | கிராமம் | :பூசாரிப்பட்டி |
| வட்டம் | :சேலம் | தொழில் | : கூலி |
| மதம் : இந்து | | | |

திரு.L.ஆபிரகாம்லிங்கன், பி.எஸ்சி., எல்எல்எம்., முதலாவது மாவட்ட கூடுதல் நீதிபதி அவர்கள், Solemnly affirmed in accordance with the provisions of Oath Act 44/1969, this the 15th day of July, 2019.

<u>முதல்விசாரணை</u>

நான் பூசாரிப்பட்டி கிராமத்தில் வைரன்காட்டில் குடும்பத்துடன் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். எனக்கு 2 மகன்கள், 1 பெண் குழந்தை உள்ளனர். எனது மூத்த மகன் பெயர் திருப்பதி, இளையவன் கோவிந்தராஜ், மகள் ரேவதி. அனைவருக்கும் திருமணமாகிவிட்டது. எனது மகன்களுடன் கூட்டுக்குடும்பமாக வசித்து வந்தோம். எனது மூத்த மகன் திருப்பதி வசந்தா என்கிற ஒரு பெண்ணை காதலித்து திருமணம் செய்துக்கொண்டான். அவர்களுக்கு மூன்று பெண் குழந்தைகளும் பிறந்து உள்ளன. எனது மகன் திருப்பதி கொத்து வேலை செய்து வந்தார். ஆஜர் எதிரி தனபாலை எனக்கு நன்றாக தெரியும். அவரது தகப்பனாரின் பெயர் சேகர். ஆஜர் எதிரி எனது கொழுந்தனின் மகன் தான். சுமார் 2 வருடத்திற்கு முன்பு ஒரு செவ்வாய்க்கிழமை இரவு 6.30 மணியிலிருந்து 7 மணிக்குள்ளாக சம்பவம் நடைபெற்றது. என் மகன் திருப்பதியை ஆஜர் எதிரி தனபால் அவருடைய

தோட்டத்திலுள்ள கிணற்றின் அருகில் வீச்சுஅருவாளால் வெட்டினார். வெட்டிய பிறகு வெட்டிய வீச்சுஅருவாளுடன் ஆஜர் எதிரி ஓடிவிட்டார். நான் சம்பவத்தை நேரில் பார்தேன். ஆஜர் எதிரி என்னிடம் காட்டப்படும் வீச்சுஅருவாளால் தான் என் மகனை வெட்டினார். அந்த வீச்சுஅருவாள் சா.பொ.1. நாங்கள் குலதெய்வம் கோவிலுக்கு அதற்கு முந்தைய சனிக்கிழமை தவம் செய்தோம். அதன் தொடர்ச்சியாக ஞாயிற்றுக்கிழமை கிடா விருந்து செய்து உறவினர்களுக்கு விருந்து வைத்தோம். அதன் பின்னிட்டு செவ்வாய்க்கிழமை இனிப்பு பலாகாரம் செய்து உறவினர்களுக்கு கொடுப்பதற்காக நான் ஏற்பாடு செய்துக்கொண்டிருந்த போது எனது மகன் அன்றைய தினம் மாலை சுமார் 6.30 மணியளவில் கடைக்கு சென்று பீடி வாங்கிக்கொண்டு தனது மாமனாரை அழைத்து வருவதாக சொல்லிவிட்டு வீட்டிலிருந்து சென்றார். சுமார் 100 அடி தூரம் எங்களுக்கும் எதிரிக்கும் சொந்தமான பொதுப்பாதை வழியாக சென்றபோது ஆஜர் எதிரி வழிமறித்து வெட்டிவிட்டார். என் மகனை வெட்டும்போது கத்தியதால் சத்தம் கேட்டு நான் ஓடிப்போய் பார்த்தேன். சம்பவத்தை எனது மற்றொரு மகன் கோவிந்தராஜூம், மருமகன் கௌதமனும் பார்த்தார்கள். எனக்கு முன்பே கோவிந்தராஜூம், கௌதமனும் முன்னாடி சென்றார்கள். இறந்து போன திருப்பதியின் மனைவி வசந்தாவிற்கும், ஆஜர் எதிரிக்கும் கள்ளத்தொடர்பு இருந்து வந்தது. அதனால் மகனுக்கும், மருமகளுக்குமிடையே அடிக்கடி தகராறு இருந்து வந்தது. அதன் காரணமாக எனது மருமகள் கோபித்துக்கொண்டு தனது தாய்வீட்டிற்குச்சென்றுவிடுவார். நாங்கள் சமாதானம் செய்து அழைத்து வருவோம். என் மகனை கொன்றுவிட்டு எனது மருமகளை அடைய வேண்டும் என்ற நோக்கத்தில் எதிரி கொலை செய்துவிட்டார். தற்போது எனது மருமகளை எதிரி தன் வசம் வைத்துக்கொண்டார். எனது மூத்த பேரக்குழந்தை என்னிடமும், மற்ற குழந்தைகள் மருமகளிடமும் உள்ளன. எனது மகன் திருப்பதியை ஆஜர் எதிரி வீச்சுஅருவாளால் எனது மகனின் வலது தலைப்பகுதியில் வெட்டினார்.

அதனால் வலது கண் வெளியில் வந்தது. மூக்கு, நெற்றி ஆகிய இடங்களிலும், மற்றொரு பகுதியின் தோள்பட்டையிலும், வயிற்றுப்பகுதியிலும் வெட்டிவிட்டார். என் மகன் குலதெய்வம் கோவிலுக்கு மொட்டை போட்டுயிருந்தார். அதனால் அவருக்கு ஏற்பட்ட காயங்களை என்னால் தெளிவாக பார்க்க முடிந்தது. சம்பவத்தின் போது என் மகன் சட்டை ஏதும் அணியாமல் லுங்கியுடன் தான் கடைக்குச்சென்றார். சம்பவம் நடந்த உடன் மகனை காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் ஆம்புலண்ஸிற்கு தகவல் கொடுத்து ஆம்புலண்ஸ் வந்தது. எனது மகனை ஆம்புலண்ஸ் மூலம் சேலம் அரசு மருத்துவமனைக்கு எடுத்துச்சென்றோம். அங்கு மருத்துவர் மகனை பரிசோதித்துவிட்டு இறந்துவிட்டதாக சொன்னார். அதன் பின்னிட்டு அன்று இரவு தீவட்டிபட்டி காவல்நிலையம் சென்று போலிசாரிடம் சம்பவம் குறித்து வாக்குமூலம் கொடுத்தேன். எனது வாக்குமூலத்தை போலிசார் பதிவு செய்து என்னிடம் படித்துக்காட்டினார்கள். நான் சொன்னவாறு புகார் வாக்குமூலம் பதிவு செய்திருந்தார்கள். அதில் நான் எனது கைரேகையைப்பதிவுசெய்தேன். புகார் வாக்குமூலம் அ.த.சா.ஆ.1. போலிசார் எனது வாக்குமூலத்தின் பேரில் வழக்கு பதிவு செய்து என்னை விசாரித்தார்கள். மறுநாள் எனது மகனின் பிரேதத்தின் மீது பிரேத பரிசோதனை செய்து என்னிடம் பிரேதத்தை போலிசார் ஒப்படைத்தனர்.

எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை

எனது மகன் இறந்த தினத்தன்று இரவு 8.30, 9 மணியளவில் தீவட்டிபட்டி காவல்நிலையத்திற்கு நான் சென்றுவிட்டேனா என்றால் - சென்றுவிட்டேன். அப்போது காவல்நிலையத்திலிருந்த உதவிஆய்வாளர், ஆய்வாளர், டிஎஸ்பி ஆகியோரிடம் நான் புகார் கொடுத்தேனா என்றால் - புகார் கொடுத்தேன். அந்த அதிகாரிகள் யாரென்று எனக்குத்தெரியாது. தீவட்டிபட்டி காவல்நிலையத்திலுள்ள உதவிஆய்வாளர் யார் என்பதும் ஆய்வாளர் யார்

என்பதும் எனக்கு பிரித்து பார்த்து சொல்லமுடியும். அ.த.சா.ஆ.1 புகார் வாக்குமூலம் என்பது இவ்வழக்கிற்காக எங்களால் பின்னிட்டு ஜோடனை செய்து எழுதப்பட்டுள்ளது என்று சொன்னால் - அது சரியல்ல. இவ்வழக்கில் உண்மையாக கொடுக்கப்பட்ட புகார் வேண்டுமென்றே மறைக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் - அது சரியல்ல. தீவட்டிபட்டி அருகிலுள்ள நான்குவழிச்சாலையிலிருந்து கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி செல்லும் சாலை பகுதியில் தான் வைரன்காடு, பூசாரிப்பட்டி ஆகிய கிராமங்கள் உள்ளன் என்றால் - சரிதான். அந்த ரோட்டின் தெற்கு பகுதியில் கொஞ்ச தூரம் தள்ளித்தான் எங்களுக்கு சொந்தமான வீடு உள்ளது என்றால் - சரிதான். ரோட்டை விட்டு இறங்கிய உடன் வெங்கடாசலத்தின் வீடும் அதைத்தாண்டி முருகேசன் மற்றும் கணேசன் வீடு ஆகியவைகள் உள்ளன என்றால் - சரிதான். அதைத்தாண்டி தான் எதிரி தனபாலின் வீடு உள்ளது என்றால் - சரிதான். கணேசன் வீட்டிற்கு எதிரி வீட்டிற்கும் இடைப்பட்ட பகுதியில் எதிரியின் கிணறு மற்றும் காடு உள்ளது என்றால் - சரிதான். எதிரியின் வீட்டிற்கு தெற்கு பக்கத்தில் எதிரியின் காடும், அதைத்தாண்டி சின்னப்பபையன், ரத்தினம், ஆகியோரின் காடுகளை தாண்டி எனது வீடு உள்ளது என்றால் - சரிதான். எனது வீட்டிற்கும் தெற்கு பகுதியில் எதிரியின் காடும் என்னுடைய காடும் உள்ளது என்றால் - சரிதான். அந்த எதிரியின் வீட்டிற்கு கிழக்குப்புறமாக கணேசன், சாந்தி மற்றும் வேலுமணி ஆகியோரது வீடுகளும் உள்ளன என்றால் - சரிதான். ஆஜர் எதிரியும் எனது மகன் திருப்பதியும் அடிக்கடி ரோட்டு வேலை பார்ப்பதற்காக மேஸ்திரிகளாக ஒன்றாக சென்று வருவார்கள் என்றால் - சரிதான். காதல் திருமணத்திற்குப்பின்பு எனது மகனும் வசந்தியும் எங்களது வீட்டில் கூட்டுக்குடும்பமாக மிகவும் சந்தோஷமாகத்தான் வாழ்ந்தார்கள். எனது மகன் திருப்பதியும் அவனது மனைவியை குழந்தைகளுடன் அடிக்கடி கோவில், குளம் என்று பல இடங்களுக்கு சென்று வருவார்கள் என்றால் - சரிதான். எனது மகன் திருப்பதி இறப்பதற்கு சில நாட்களுக்கு முன்பாக கஞ்சா அடிக்கும் பழக்கத்தை

நிறுத்துவதற்காக அரசுமருத்துவமனைக்கு திருப்பதியை நாங்கள் அழைத்துச்சென்றிருந்தோம் என்றால் - உண்மைதான். சம்பவத்திற்கு சில நாட்களுக்கு முன்பாக எங்களது காட்டின் தெற்கு பொழியில் எதிரியின் காட்டு பகுதியை சேர்ப்பதற்காக பொழியைபுரட்டி மாற்றி அமைத்திருந்தோம் என்று சொன்னால் - அப்படி எதுவும் நடக்கவில்லை. பொழியை மாற்றியது சம்மந்தமாக எங்களுக்குள் சன்டை நடைபெற்றது என்றால் - சன்டை எதுவும் நடக்கவில்லை. எனது மருமகள் வசந்தாவிற்கும், எதிரிக்குமிடையே கள்ளத்தொடர்பு இருந்ததாக நான் சொல்வதை பொறுத்து எங்கள் கிராமத்தில் எப்போதாவது முறையிட்டு பஞ்சாயத்து எதுவும் நடைபெற்றதா அல்லது வேறு எங்காவது புகார் எதுவும் கொடுக்கப்பட்டிருந்ததா என்றால் - அப்படி எதுவும் நடக்கவில்லை. எனது மகன் திருப்பதியிடம் அவனது மனைவி மீது ஆதாரம் எதுவும் இல்லாமல் பழி எதுவும் சுமத்தாதே என்று அறிவுரையும் நான் வழங்கினேன் என்றால் - சரிதான். சம்பவம் நடந்ததற்கு முதல்நாள் வரை நானும், எனது மருமகளும், குழந்தைகளும் எங்களது குலதெய்வத்தை வழிபடுவதற்காக சென்று சாமி கும்பிட்டுவிட்டு சந்தோஷமாக தான் வந்திருந்தோம் என்றால் - சந்தோஷமாக தான் இருந்தோம். சம்பவம் நடந்த அன்று காலையில் எங்கள் வீட்டில் இனிப்பு பலகாரங்கள் செய்து எங்களுக்கு தெரிந்தவர்களுக்கெல்லாம் பலகாரங்களை கொடுத்து சந்தோஷமாகத்தான் இருந்தோம் என்றால் - சரிதான். அப்போது எனது மகன் திருப்பதி மது அருந்தும் போதையில் தான் இருந்தார் என்றால் - அப்போது அவர் மது அருந்தவில்லை. அன்றைய தினம் சாயங்காலமும் மது அருந்தவில்லை. சம்பவம் நடந்த போது மாலை 6.30 மணியென்பதால் இருட்டுகட்டிவிட்டது என்றால் - சரிதான். எனது மகன் திருப்பதி அன்றைய தினம் எனது வீட்டிலிருந்து தெற்கில் இருந்து வடக்கு நோக்கி எதிரியின் வீட்டு அருகே சென்றுக்கொண்டிருந்தார் என்றால் - சரிதான். கிணறு மற்றும் அதன் அருகிலுள்ள வீடு மற்றும் நிலம் அனைத்தும் எதிரி மற்றும் அவரது தகப்பனார்

சேகருக்கு சொந்தமானது என்றால் - சரிதான். எங்களது காட்டுக்கும் எதிரியின் காட்டுக்கும் இடைப்பட்ட பகுதியில் அமைந்துள்ள பாதை என்பது பொதுப்பாதை அல்ல என்றாலும், அது பொதுப்பாதை அல்ல என்கிற நிலையில் வருவாய்த்துறை ஆவணங்களுக்கு எதிரான வகையில் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் - அது சரியல்ல. நான் கொடுத்துள்ள புகார் வாக்குமூலத்திலும் காவல் துறை விசாரணை வாக்குமூலத்திலும் பிரேத விசாரணை அறிக்கையின் போதும் மேற்படி பாதை இருவருக்கும் பாத்தியப்பட்ட பொதுப்பாதை என்கிற விஷயத்தை நான் சொல்லியிருக்கவில்லை என்று சொன்னால் - போலிசாரிடம் சொன்னேன். 6.30 மணிக்கு எனது மகன் திருப்பதி கிளம்பி சென்ற போது சத்தம் கேட்டுத்தான் நானும் கோவிந்தராஜூம் மருமகன் கௌதமனும் சென்றோம் என்றால் - சரிதான். அப்போது மணி மாலை 7 மணியிருக்கும் என்றால் - சரிதான். எனது மகன் திருப்பதி சென்ற பிறகு ஒரு பத்து நிமிடம் சத்தம் கேட்டுக்கொண்டிருந்தது. எனது மகன் திருப்பதியை ஆஜர் எதிரி தனபால் அவரது தோட்டத்தின் கிணற்றிற்கு அருகில் வீச்சுஅருவாளால் வெட்டினார் அதை நான் கண்ணால் பார்த்தேன் என்று முதல்விசாரணையில் நான் சொன்ன விஷயத்தை புகார் வாக்குமூலத்திலோ, காவல்துறை விசாரணை வாக்குமூலத்திலோ அல்லது பிரேத விசாரணையின் போதோ நான் சொல்லியிருக்கவில்லை என்று சொன்னால் - எனது மகன் தாக்கப்பட்டிருந்த சம்பவத்தை பார்த்து பதற்றத்திலும், பயத்திலும் இருந்ததால் அந்த வார்த்தைகளை சொல்லாமல் கூட இருந்திருக்கலாம். சா.பொ.1-ஐ பிரேத பரிசோதனை செய்த பிறகு அங்கு வைத்து என்னிடம் போலிசார் காண்பித்தார்கள். சா.பொ.1 ஐ வைத்து போலிசாரிடம் நான் இந்த அருவாளால் தான் வெட்டினார் என்று அடையாளம் காட்டவில்லை. எனது மகனோ, மருமகனோ குலசாமி கும்பிட்ட போது சா.பொ.1 ஐ வைத்து தான் ஆடு வெட்டினார்கள் என்றால் - அது அபாண்டமான பொய்யாகும். புகாரிலோ, போலிசார் விசாரணையிலோ எனது மருமகளை

அடைய வேண்டுமென்பதற்காக எதிரி என் மகனை கொலை செய்துவிட்டான் என்று நான் எதுவும் சொல்லவில்லை என்றால் - சரியல்ல. எனது மருமகளை ஆஜர் எதிரி வைத்துக்கொண்டார் என்று தற்போது பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் - அது சரியல்ல. எனது மருமகளுக்கும், எதிரிக்குமிடையே நான் சொல்வது போன்ற எத்தகைய தவறான உறவும் இல்லை என்றாலும் என் மருமகள் தீவட்டிபட்டி காவல்நிலையத்திற்கு அருகிலேயே ஒரு வீட்டில் வசித்து வருகிறார் என்றாலும் - அது சரியல்ல. நடந்ததாக சொல்லப்படும் சம்பவத்தின் போது எனது மகன்கள் திருப்பதியும், கோவிந்தராஜூம், மருமகன் கொளதமனும் அத்துமீறி நுழைந்து எதிரியையும், அவரது தாயார் சுமதியையும் சா.பொ.1 மூலம் காயப்படுத்தியதாக சொல்லி அதே தீவட்டிபட்டி காவல்நிலையத்தில் ஒரு புகார் கொடுக்கப்பட்டு வழக்கும் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் - சரிதான். காயம்பட்டு கிடந்த எனது மகன் திருப்பதியை அவசர சிகிச்சை ஊர்தி மூலமாக எனது மருமகள் வசந்தாவும், மருமகன் கௌதமனும் ஆகியோரும் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள் என்றால் - சரிதான். நான் தீவட்டிபட்டி காவல்நிலையத்திற்கு சென்றுவிட்டேன். அப்போது எதிரியையும், அவரது தாயார் சுமதியையும் எதிரியின் தம்பி தர்மன் என்பவர் ஒரு ஆட்டோவில் ஏற்றி தீவட்டிபட்டி காவல்நிலையத்திற்கு கொண்டு சென்றார்கள் என்றால் - சரிதான். அப்போது எதிரி அவரது தாயார் சுமதி, தர்மன் ஆகியோர்கள் காவல்நிலையத்திற்கு உள் பகுதியிலிருந்தார்கள். நான் வெளியே இருந்தேன் என்றால் - சரிதான். எதிரியும் சுமதியும் இரத்தகறையுடன் கட்டுப்போட்டப்படித்தான் காவல்நிலையத்திற்கு வந்திருந்தார்கள் என்றால் - இரத்தக்கறையுடன் தான் வந்தார்கள். எதிரியின் வீட்டிற்கு தெற்கு பக்கத்திலுள்ள டியூப்லைட் உடைக்கப்பட்டிருந்ததா என்றால் - அதையெல்லாம் நான் பார்க்கவில்லை. அன்றைய தினம் எனது மகன் திருப்பதியும், மகன் கோவிந்தராஜூம் மருமகன் கொளதமனும் அத்துமீறி நுழைந்து எதிரியையும் அவரது தாயார் சுமதியையும் அவர்களது வீட்டிற்குள்

வைத்து தாக்கி காயப்படுத்திவிட்டார்கள் என்றாலும் அவரது வீட்டில் கட்டிலில் படுத்திருந்த எதிரியை எனது மகன் திருப்பதி தொன்னையை வைத்து (கட்டை) எதிரியின் முகத்தில் அடித்தும் எனது மகன் கோவிந்தராஜ் எதிரியை சா.பொ.1 அருவாளை வைத்து பல்வேறு காயங்களை ஏற்படுத்தியும் அருவாமனையால் எனது மருமகன் கொளதமன் எதிரியின் தாயார் சுமதியை வெட்டி காயப்படுத்தியும் கொடுங்காயங்களை ஏற்படுத்திவிட்டோம் என்றாலும் அதன் பிறகு ஏதோ ஒரு வகையில் ஏற்பட்ட காயத்தால் எனது மகன் திருப்பதி இறந்துவிட்டதால் பழிவாங்க வேண்டும் என்ற எண்ணத்தில் செயல்பட்டு எதிரி கொலை செய்ததாக அபாண்டமான புகாரை கொடுத்திருக்கிறோம் என்று சொன்னால் - அது சரியல்ல. சம்பவம் நடந்த பிறகு மறுநாள் திருப்பதியின் காரியத்திற்கு தான் எனது மகன் கோவிந்தராஜ் வந்தார் என்றால் - அது சரியல்ல. போலிசார் கேட்டுக்கொண்டதின் பேரிலும் இறந்துபோனது எனது மகன் என்பதாலும் உண்மைக்குப்புறம்பாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் - சரியல்ல. நான் சொன்னது போல் சொன்ன விதத்தில் சொன்ன படி எந்த ஒரு சம்பவமும் நடைபெறவில்லை என்று சொன்னால் - அது சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

LTI./- Ponnammal

Sd./-L.Abraham Lincoln,
I Additional District Judge,
Salem,